# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2043/28 - 2017 ඔක්තෝබර් මස 31 වැනි අඟහරුවාදා - 2017.10.31

*2043/28 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசு பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், தேசிய அரச சட்ட சபையினால் அமுலாக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டளைச் சட்டப் பிரிவு 15 (1) இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் அடிப்படையாகக் கொண்டு, மொறட்டுவை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணையில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ள காணிகளை இன்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதிக்கத்துக்கு உட்படும் என இக்கட்டளை மூலம் உரித்தாக்குகின்றேன்.

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா. உ.)
பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள், "சுஹூறுபாய",
பத்தரமுல்லை,
2013, ஒற்றோபர் 27.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவினுள் மொறட்டுவை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மொறட்டுவை கிராமத்தில் அமைந்துள்ள காணியானது, நில அளவை சிரேஷ்ட மேல் அதிகாரியினால் 2010, யூன் முதல் 2010 செத்தெம்பர் என திகதியிடப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. : 520214 இனை கொண்ட மாதிரிப்படத்தில் காணித்துண்டு இல. : 164 எனக் காட்டப்பட்டுள்ளது. இக்காணியானது, வடக்கு : பூ. மா. இ. 520214 இன் காணித்துண்டு இல. : 165 இனையும், கிழக்கு : பூ. மா. இ. 520214 இன் காணித்துண்டு இல. : 165 இனையும், தெற்கு : பூ. மா. இ. 520214 இன் காணித்துண்டு இல. : 165 இனையும் ; மேற்கு : பூ. மா இ. 520214 இன் காணித்துண்டு இல. 165 இனையும் எல்லைகளாகக் கொண்டு (0.0806 ஹெக்டேயார்) விஸ்தீரணமுடைய காணியாகும்.

11 - 786


1A - G 26518 — 09 (2017/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.